# எழுதிப் பழகுவோம்!

**கொடுக்கப்பட்ட சொற்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைத்தல்.**

## 1. நீந்து

1. எனக்கு நீந்தத் தெரியாது.
2. நீச்சல் மிகச்சிறந்த உடற்பயிற்சி.
3. மீன்கள் நீரில் நீந்த வல்லவை.

## 2. எழுது

1. நான் கவிதை எழுதினேன்.
2. ஒருமுறை எழுதுவது மூன்று முறை படிப்பதற்குச் சமம்.
3. பாரதி தோழிக்கு கடிதங்கள் எழுதிக் கொடுப்பாள்.

## 3. குதி

1. என் மாமாவைப் பார்த்த மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தேன்.
2. மான் துள்ளிக் குதித்து ஓடியது.
3. ராமு நீச்சல் குளத்தில் குதித்தான்.

## 4. பள்ளிக்கூடம்

1. சரவணன் பள்ளிக்கூடத்திற்கு செல்ல அழுவான்.
2. பள்ளிக்கு குறித்த நேரத்தில் செல்ல வேண்டும்.
3. பள்ளியின் சட்ட திட்டங்களை மதித்து நடக்க வேண்டும்.

## 5. பட்டம்

1. எனக்கு பட்டம் விட மிகவும் பிடிக்கும்.
2. காகிதத்தாள், குச்சி, பசை போன்றவற்றைக் கொண்டு பட்டம் செய்யலாம்.
3. பட்டங்கள் வண்ண வண்ண நிறங்களில் காணப்படும்.